7

# MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S.G.KANIRAJROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.202/1A2, APPAIYANAIKENPATTI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 25.04.2023, 11.00 A.M AT PERUNTHALAIVAR K. KAMARAJAR THIRUMANA MAHAL, DOOR NO.4/294A, MELANMARAINADU VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | J.Ravikumar | : | District Revenue Officer/<br>Additional District Magistrate,<br>Virudhunagar. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | R. Renganathan | : | Tahsildar,<br>Vembakottai Taluk,<br>Virudhunagar. |

Public, Project proponent 61 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s.G. Kaniraj Rough Stone and Gravel Quarry, SF.No.202/1A2, Appaiyanaikenpatti Village, Vembakottai Taluk, Virudhunagar Districtwas conducted atPerunthalaivarK. Kamarajarthirumana mahal, door no.4/294A, MelanmarainaduVillage, VembakottaiTaluk,Virudhunagar District.The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer/Additional District Magistrate, Virudhunagar, other officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the

public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 11.03.2023.He also informed that vide publicity wasgiven about the conduct of public hearing by circulating phamlets in the nearby villages of the project site. Further, he stated thatthe arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently,the District Environmental Engineer stated thatthe project proponent will make a detailed presentation on the proposedproject and requested the public toexpress their views after completion of the presentation.He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to theState Environment Impact Assessment Authority, Tamilnadu.

The District Revenue Officer/Additional District Magistrate, Virudhunagar initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on theproject of M/s G. KanirajRough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

The public has furnished their views as follows.

1. **<u>Thiru. Ganesh Kumar, Appaiyanaikenpatti:</u>**

   He informed that the proposed project will not have any impact and permission may be given to the quarry.

2. **<u>Thiru.Santhana Kumar, Jakkamalpuram:</u>**

   He informed that there will be employment opportunity due to the quarry and environment will not be affected. Hence, permission may be given.

3. **<u>Thiru.Sivakumar, Melanmarinadu:</u>**

   He informed that as it is a manual quarry, there will not be any impact. He further informed that this quarry is good for daily labours and nearby villages can get stone easily.

4. **Thiru. Kannan, 10 Rupees Iyakkam, Virudhunagar :**

   He informed that public supports this project and the mineral excavated here will be utilized for construction. There are agricultural lands in the vicinity of the site. He requested that the permission may be given to the project by following rules, so that the animals, humans and water resources will get protected. He further informed that he withdrew the complaint given to the District Revenue Officer on previous day.

After that, since no one came forward to giveview on the project, the District Revenue Officer/ Additional District Magistrate invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written, however no written petitions/views are received.

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

District Revenue Officer /
Additional District Magistrate,
Virudhunagar

Enclosures:

1. Copy of Attendance Register (Total 5 – pages, 61 persons)
2. Video graph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**<u>விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமத்தில் புல எண். 202/1A2,-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஜி . கனிராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 25.04.2023 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், மேலாண்மறைநாடு கிராமம், கதவு எண்: 4/294ல் உள்ள பெருந்தலைவர் கு . காமராஜர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.</u>**

**<u>பங்கேற்றோர்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஜெ. ரவிகுமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. து.மு. கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திரு. இரா. ரெங்கநாதன் | : | வட்டாசியர்,<br>வெம்பகோட்டை வட்டம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 61 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமத்தில் புல எண். 202/1A2-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஜி . கனிராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், மேலாண்மறைநாடு கிராமம், கதவு எண்: 4/294ல் உள்ள பெருந்தலைவர் கு . காமராஜர் திருமண மண்டபத்தில் 25.04.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 11.03.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியை கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள். ஜி . கனிராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

**1. திரு. கணேஷ்குமார், அப்பையநாயக்கன்பட்டி :**

திரு. கணேஷ்குமார் அவர்கள், இந்த குவாரியால் எந்த பாதிப்பும் இல்லை. குவாரிக்கு அனுமதி அளிக்கலாம் எனக் கூறினார்.

**2. திரு. சந்தனகுமார், சக்கமாள்புரம் :**

திரு. சந்தனகுமார் அவர்கள், குவாரி வருவதால் இங்குள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும் எனவும், சுற்றுச்சூழல் பாதிப்படையாது எனவும் தெரிவித்தார். மேலும் குவாரிக்கு அனுமதி அளிக்கலாம் எனக் கூறினார்.

**3. திரு. சிவக்குமார், மேலாண்மறைநாடு :**

திரு. சிவக்குமார் அவர்கள், கையினால் உடைக்கும் இக்குவாரியால் எந்த பாதிப்பும் இல்லை என்றும், இங்குள்ள கூலி தொழிலாளர்களுக்கு இதனால் பயன் கிடைக்கும் என்றும், அருகில் உள்ள ஊர்களுக்கு கல் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

4. திரு. கண்ணன், 10 ரூபாய் இயக்கம், விருதுநகர் :

திரு. கண்ணன் அவர்கள், மக்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாகவும், இங்குள்ள கனிமவளம் வீடு கட்டுமானத்திற்கு உபயோகமாக இருக்கும் எனவும் தெரிவித்தார். அருகில் விவசாய நிலங்கள் இருப்பதாகத் தெரிவித்தார். அரசு விதிமுறைகளை பின்பற்றி இக்குவாரிக்கு அனுமதி அளித்து, வனவிலங்கு, மனிதர்கள் மற்றும் நீர் ஆதாரங்களை காப்பாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், தான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் முதல்நாள் அளித்த புகார் மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாகவும் கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வவமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இருப்பினும் எழுத்து பூர்வமான கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லை.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

28.4.2023
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

28.4.2023
மாவட்ட வருவாய் அலுவலர் /
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்,
விருதுநகர்

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் 5 - பக்கங்கள், 61 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).